[திரு. ஆர். காந்தி] [2024 ஜூன் 27

என அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாட்டின் முதல் Mini Handloom Park காஞ்சிபுரத்தில் 29-2-2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. 2-வது Park, குடியாத்தம் நகரில் 9-3-2024 அன்று இடம் பார்வையிடப்பட்டு, பூங்காவின் துவக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 3-வது Park, திண்டுக்கல் மாவட்டம், இதற்கு நிறைய முயற்சி எடுத்தவர் மாண்புமிகு அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்களும், அண்ணன் மாண்புமிகு அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்களும்தான். ஒரு நாள் மாண்புமிகு அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்களால் கலந்துகொள்ள முடியவில்லை—3-வது Park, திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப்பட்டியில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலும், நரிக்கல்பட்டியில் 14-6-2024 அன்றும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்போதுதான், சென்ற வாரம் துவக்கி வைத்தோம்.

Unity Mall என்பது தமிழ்நாட்டின் கைத்தறி பொருட்களைச் சந்தைப்படுத்தவும், வேலைவாய்ப்பை உருவாக்கவும், ஏற்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த வணிக வளாகம் ஆகும். Unity Mall, Chennai, Egmore, Co-optex வளாகத்தில், 4.5 இலட்சம் சதுரடி பரப்பளவில், ரூபாய் 227 கோடி மதிப்பீட்டில், 9 மாடிக் கட்டடம் கட்ட tender விடப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆரணியில் டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறி பட்டுப் பூங்கா, 22 ஏக்கர் நிலப்பரப்பில், சுமார் ரூபாய் 74 கோடி மதிப்பீட்டில் அமைக்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஜவுளி தொழில்முனைவோர்களுக்கு அரசு மானியம் வழங்கியது. Tamil Nadu New Integrated Textile Policy திட்டத்தின்கீழ், விசைத்தறிகளை நவீனப்படுத்த, 10 சதவிகிதம் அரசு மானியத் தொகை, ரூபாய் 9.25 கோடி, 22-1-2024 அன்று 17 ஜவுளி தொழில் நிறுவனங்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும், 29 ஜவுளி தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 15.27 கோடி, 4-3-2024 அன்று விடுவிக்கப்பட்டுள்ளது.

விசைத்தறிகளுக்கு விலையில்லா மின்சாரத் திட்டம். கழக ஆட்சியில், 2006 ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்

2024 ஜூன் 27] [திரு. ஆர். காந்தி]

அவர்களால், விசைத்தறிக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் என அறிவிக்கப்பட்டது. தற்போது, நம்முடைய மாண்புமிகு தலைவர் அவர்கள், 3-3-2023 முதல் கைத்தறி நெசவாளர்களுக்கு, bi-monthly 200 Units-லிருந்து 300 Units ஆகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு, bi-monthly 750 Units-லிருந்து 1000 Units ஆகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள். 2023-2024 ஆம் ஆண்டிற்கு, கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.19.38 கோடியும், விசைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.1,095.40 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் பற்றி நேற்றுகூட பேசினார்கள். ஒன்றிய அரசின் PM AWAS YOJANA திட்டத்தின்கீழ், இதற்கு முன்பு ஒரு வீடு கட்டுவதற்கு, ரூபாய் 2.10 இலட்சம் முதல் ரூபாய் 2.50 இலட்சம் மட்டுமே மானியம் வழங்கப்பட்டது. ஆனால், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தற்போது, கிராமங்களில் கைத்தறி நெசவாளர்களுக்கு ஒன்றிய அரசின் பங்கு ரூ.79,200; மாநில அரசின் பங்காக ரூ.3,20,800; மொத்தமாக ரூ.4 இலட்சம் வழங்க நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். நகர்ப்புரங்களில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.1,50,000, மாநில அரசின் பங்கோ ரூ.2,50,000 என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். இத்திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக 496 பயனாளிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, 240 பயனாளிகளுக்கு ரூ.5.06 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம். நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு, மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூபாய் 1,000/-லிருந்து, ரூபாய் 1,200/- ஆக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1-8-2023 முதல் உயர்த்தப்பட்டது.

Weavers Savings & Security Scheme (SSS) முழு தொகையினைப் பெறுவதற்கு குறைந்தபட்ச கால அளவு 25 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகளாக 5-7-2023 முதல் குறைக்கப்பட்டுள்ளது.

ஈமச் சடங்கு உதவித் தொகை. நெசவாளர்கள் இறக்கும்போது அவர்களின் ஈமச் சடங்கிற்கான உதவித் தொகையை, ரூபாய் 2,000/-லிருந்து, ரூபாய் 5,000/- ஆக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தித் தந்திருக்கிறார்கள்.